செ.வெ.எண்:11 நாள்:06.09.2019

# அரியலூர் மாவட்டம், மல்லூரில் ஏரிகள், ஓடை புனரமைப்பு பணிகள் தொடர்பாக விவசாயிகளிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் கேட்டறிந்தார்.

அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் அரியலூர் வட்டம், மல்லூர் கிராமத்தில் உள்ள மாணிக்கவாசகர் ஓடை மற்றும் நைனேரியில் குடிமராமத்து பணிகளின் கீழ் அணைக்கட்டு புதுப்பிக்கப்படும் இடத்தினையும், ஏரி புனரமைக்கும் பணியினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மல்லூர் கிராமத்தில் உள்ள மாணிக்கவாசகர் ஓடையில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் 613 மீட்டர் நீளமுள்ள வடிகாலினையும், பழுதடைந்துள்ள அணைக்கட்டினையும் புனரமைக்கும் பணியினையும், புதிய அணைக்கட்டு ஒன்று புதுப்பிக்கப்பட்டு வரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், மல்லூரிலிருந்து நைனேரியில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் ஏரியின் கரைகள், வரத்துவாய்க்கால், வடிகால் மற்றும் ஏரியிலுள்ள 2 மதகுகளும் புனரமைக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகளிடம் நடைபெற்று வரும் குடிமராமத்து பணிகள் முறையாக செயல்படுகிறதா என்பதையும் மற்றும் வரத்து வாய்க்கால், வடிநீர் வாய்க்கால் மற்றும் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறையாக வரன்முறைப்படுத்தியப்பின், முழுமையாக தூர்வார வேண்டும். இப்பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, உதவி செயற்பொறியாளர் வை.வேல்முருகன், உதவி பொறியாளர் டி.மருதமுத்து மற்றும் விவசாயிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**